**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் கொழும்பு மாவட்ட நீதாசன வலயத்திற்குரிய 2018 ஆம் ஆண்டிற்கான யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2087 - 2018 අගෝස්තු මස 31 වැනි සිකුරාදා - 2018.08.31

*2087 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 160 |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 161 |


**கவனிக்க.-** புலமைச் சொத்து (திருத்தம்) சட்டமூலம் 2018, ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


159-B81444-353 (2018/08)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## சிலாபம் மாவட்ட நீதிமன்றம்

### 4485/MB ஆம் இலக்க வழக்குடன் தொடர்புடைய சிலாபம் மாவட்ட நீதிமன்றின் பிசுக்கால் மூலம் செய்யப்படுகின்ற பெறுமதியான ஆதனம் ஒன்றினை பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்பனை செய்தல்

*வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் காணிப் பதிவகப் பிரிவிற்கு உட்பட்ட வடக்கு பிடிகல் கோரளை, யகம் பத்துவ, இரட்டகுளம் என்ற கிராமத்தில் அமைந்தள்ள "கொட்டவவெவ வத்தை என்று அழைக்கப்படும் கும்புக்கஹவத்தை" என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. ஆர். எப். எச். பிரனாந்து அவர்களால் 2011.09.06 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 6106 ஏ ஆம் இலக்க வரைபடத்தின் 1 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் காணித்துண்டு.*

*பரப்பளவு 00ஏ. 00றூட் 20பேர்ச். காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை மற்றும் கட்டிடங்கள் அனைத்தும் அடங்கலாக. இது சிலாபம் காணிப்பதிவகத்தில் ஆர். 48/283 ஏ இன் கீழ் பதியப்பட்டுள்ளது.*

***ஆதனத்துக்குச் செல்லும் பாதை.***- *மஹவெவவிலிருந்து சிலாபம் செல்லும் பாதையில் சிலாபம் பக்கமாக 4 கிலோ மீற்றர் அளவு செல்லும் போது (மாதம்பை கலஹிடியாவ சந்திக்கு செல்லுவதற்கு சிறிது தூரத்துக்கு முன்னதாக) வலது பக்கமாக பிரனாந்து மாவத்தை என்ற கிளைப்பாதை அகப்படும். அந்தப் பாதையில் 100 மீற்றர் அளவு செல்லும் போது இடது கைப்பக்கமாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.*

*2018, ஒற்றோபர் 3 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் ஏல விற்பனை செய்யப்படும்.*

***கொடுப்பனவு முறை.***- *ஏல விற்பனையின் இறுதியில் ஆதனத்தை வாங்கியவர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணத்தைச் செலுத்தல் வேண்டும்.*

*(1) வாங்கிய விலையின் (நூற்றுக்கு இருபத்தி ஐந்து) 25%;*
*(2) மாகாண அதிகார சபையின் வரியாக 1% (நூற்றுக்கு ஒன்று) ;*
*(3) பிஸ்கால் கமிஷனாக சிவில் நடைமுறைச் சட்டத்தின் 258 ஆம் பிரிவின் பிரகாரம் கமிசன் பணம்;*
*(4) அனைத்து விளம்பர கட்டணங்கள்;*
*(5) எழுதுவினைஞர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500;*
*(6) விற்பனைச் செலவுகள், வேறு கட்டணங்கள் இருப்பின் அந்தப் பணம்;*
*(7) விற்பனை அத்தாட்சிப்பத்திரத்துக்கான முத்திரை வரி.*

- *குறிப்பிட்ட ஆதன விற்பனை நீதிமன்ற அங்கீகாரத்துடன் நடைபெறுகின்றது.*

*வாங்கிய விலையின் மிகுதி 75% ஆன பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.*

*மேற்கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட முழுத்தொகையையும் செலுத்தாவிடின் ஏற்கெனவே செலுத்திய பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும், மீண்டும் ஆதனத்தை ஏல விற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

*உரிமைப்பத்திரம் வேறு விபரங்களை பரிசீலிப்பதற்கும் மேலதிக விபரங்களையும் "பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய பிரதான அலுவலகம், (முதலாம் மாடி) இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டிய" என்ற முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.*

*தொலைபேசி : 032-2253300, 032-2253301*
*பெக்ஸ் : 032-22552247*

*பதிவாளர்/பிரதி பிசுக்கால்,*
*மாவட்ட நீதிமன்றம்,*
*சிலாபம்.*

*08 - 1178*

# நானாவித அறிவித்தல்கள்

## “இந்திரா புற்று நோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம்” கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

(டாக்டர்) துசிதா விஜேமான்ன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், “இந்திரா புற்று நோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம்” எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த “இந்திரா புற்று நோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம்” கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(அ) புற்று நோயாளரின் மரண எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் புற்று நோயாளரின் நிலைமையை மேம்படுத்துவதற்கும் தேவையான நிவாரணம் அத்துடன் ஆரம்பத்திலேயே புற்று நோயை இனங்கண்டு சிகிச்சைகளை மேற்கொள்ளல் மற்றும் மருந்துகளை வழங்குவதற்கு முறையானதும், சமத்துவமானதும், சாதகமுமான முறையொன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தேசிய புற்றுநோய்த் தடுப்பு வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல்;

(ஆ) புற்று நோய்த் தடுப்பு - புற்றுநோயின் அபாய நிலையைக் குறைத்துப் பாதுகாப்பளிப்பதற்கான வழிகாட்டல் மற்றும் மக்களுக்குத் தகவல்களை வழங்குவது பற்றி உறுதியளிப்பதற்கும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையில் ஈடுபடுவதற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குவதற்கும் புற்றுநோயைத் தடுப்பதற்கு அதிக பயன் தருவதும் அதிக செலவின்றியும் மேற்கொள்ள நீண்டகால உபாய முறைகளில் ஈடுபடுவதன் மூலம் புற்றுநோயாளரின் 30-50 சதவீதத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியுமாதல் ;

(இ) புற்றுநோயைக் கண்டறிதல் - நோய்க்குறிகளுடன் நோயாளரை இனங்காணுவதில் கவனம் செலுத்துதல், முடியுமானவரை விரைவில் ஆரம்பத்திலேயே தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் முன்னரே நோயைத் கண்டறிதல், பொதுவே வெற்றிகரமான சிகிச்சையை வழங்குவதற்கான ஆற்றலை அதிகரிக்கச் செய்தல்,

பிறவும்.

(டாக்டர்) துசிதா விஜேமான்ன,
பாராளுமன்ற உறுப்பினர்,
கேகாலை மாவட்டம்.

8- 940

---

### மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றம்

(வாணிப நீதிமன்ற நியாயாதிக்கத்தை செயற்படுத்தும்) (கொழும்பில் செயற்படும்)

ட இன்பியூஷன்ஸ் (பிரைவட்) லிமிடட்
கம்பனி
இல. 18 பி, சுபந்ராராம ஒழுங்கை, நுகேகொட
மற்றும்

வழக்கு இல: CHC 52/2018/CO
தன்மை: கலைத்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII பாகத்தின் கீழ் கம்பனியை கலைப்பது தொடர்பான நீதிமன்ற முன் உள்ள விண்ணப்பம் தொடர்பாக

புரிகோ ஹோங்கோங் லிமிடட்,
அறை 803,
டுங் ஹிப் கொமர்ஷல் பில்டிங்,
இல. 248, டெஸ் வொயெக்ஸ் வீதி சென்ட்ரல்,
ஹொங் கொங்.

[Purico Hong Kong Limited,
Room 803,
Tung Hip Commercial Building,
248, Des Voeux Road Central,
Hong Kong]

நிறுவனம் தனது அற்றோணித் தத்துவக்காரர்
முஹம்மத் அக்ரம் தீன் முஹமத் இர்ஷாத்
மூலம் தோன்றுகின்றார்.
இல. 19, வில்சன் வீதி,
கொழும்பு 01200,
இலங்கை.

மனுதாரர்

சிவில் நியாயாதிக்கத்தை செயல்முறைப்படுத்தும் மேல் மாகாண நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட கம்பனியை கலைத்து முடிவிடும்படி மேற்குறித்த மனுதாரர் சார்பில் கே. பி. லோ. அசோயேட்ஸ் இம் மன்றில் 2018, யூலை மாதம் 11ஆந் திகதியில் மனு ஒன்று சமர்ப்பிப்பதாக இத்தால் அறிவிப்பதோடு அம்மனு 2018, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதியன்று,

நீதிமன்றில் விசாரிக்கப்படும் எனவும் அம்மனுவின் மீது கட்டளையைப் பிறப்பிப்பதற்கு அனுசரணை அல்லது எதிர்ப்பு தெரிவிக்க விரும்பும் கம்பனிக்கு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்பு செய்தவர்கள் மனுவை பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாக அந்நோக்கத்திற்காக சமூகமளிப்பதற்கு இயலுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. மேலும் மனுவின் பிரதியை அதற்குரிய கட்டணங்களைச் செலுத்திய பின் கம்பனிக்கு கடன் கொடுத்தவர்கள் அல்லது பங்களிப்பு செய்தவர்கள் கீழே கையொப்பமிட்டவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கே. பி. லோ அசோசியேட்ஸ்,
சட்டத்தரணிகளும் பிரசித்த நொத்தாரிகளும்,
இல. 218, ஹல்ப்ஸ்டோப் வீதி, தளம் 02,
கொழும்பு – 12.

**குறிப்பு**: மனுவை விசாரணை செய்யும் போது சமுகமளிக்க எண்ணங்கொண்டவர்கள் அவர்களின் அபிப்பிராயங்களை மேலே குறிப்பிட்ட கே. பி. லோ அசோசியேட்ஸ்க்கு எழுத்து மூலமாகவோ அல்லது தபால் மூலமோ சமர்பிக்கலாம். தபால் மூலம் சமர்பிக்க விரும்பும் நபர்களின் பெயர், விலாசம் அல்லது ஏதேனும் வர்த்தக நிலையமானால் அதன் பெயர் விலாசம் என்பவற்றை அறிவித்தலில் குறிப்பிடுவது அவசியமாவதோடு நபர் அல்லது கம்பனி அல்லது அவருடைய அல்லது அவர்களுடைய சட்டத்தரணியிருந்தால் (இருப்பின்) கையொப்பமிட்டு 2018, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி மாலை ஆறு (6) மணிக்கு முன் மேற்குறிப்பிட்டவர்களுக்கு கிடைக்ககூடியதாக ஆவண செய்வதோடு தபால் மூலம் அனுப்புவதனால் அவ்வாறே கிடைக்ககூடியதாயிருத்தல் வேண்டும்.

08 –1137

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.